துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை (15-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 285

# ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை வலுவற்றது

## சட்டமா அதிபர் ஆலோசனை

### பிரேமா சபாநாயகருக்கு அறிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 15

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை வலுவற்றது; காலவதியானது— என்று சட்டமா அதிபர் தெரிவித்திருக்கிறார். அவரின் ஆலோசனையை ஜனாதிபதி பிரேமதாஸா சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

அரசமைப்புகளின் 38 [2] ஆம் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இப் பிரேரணை, அரசமைப்பின் 70 [1] (இ) பிரிவுக்கு உட்பட்டது அல்ல என்று சட்டமா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபர் திரு சுனில் டி. சில்வாவின் ஆலோசனையை ஜனாதிபதி பிரேமதாஸா பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆலோசனையையே ஜனாதிபதி பிரேமதாஸா சபாநாயகருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்.

சட்டமா அதிபர் தமது ஆலோசனையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி கடந்த ஆகஸ்ட் 30 ஆம் திகதி வெளியிட்டார்.

அந்த வேளையில் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் [நிகழ்ச்சி நிரலில்] சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் அத்தகைய பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட்டவுடன் அரசமைப்பின் 38[2] மற்றும் 70[1](இ) ஆகிய இரு பிரிவுகளும் வலுவற்றவை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டமா அதிபரின் ஆலோசனை சபாநாயகரைக் கட்டுப்படுத்தாது

கொழும்பு, செப். 15

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக சட்டமா அதிபர் திரு. சுனில் டி. சில்வா தெரிவித்த ஆலோசனைகள் சபாநாயகர் எம். எச். முகம்மதுவை எந்த வகையிலும் கட்டுப்படுத்த மாட்டா. சபாநாயகர் சுயமாக எடுக்கக் கூடிய முடிவுகளை சட்டமா அதிபரால் கட்டுப்படுத்த முடியாது!

— இவ்வாறு சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனையை மேற்கோள் காட்டி, ஜனாதிபதி பிரேமதாஸா சபாநாயகருக்கு எழுதியிருக்கும் கடிதம், ஜனாதிபதியின் பிரசங்கல் தந்திரங்களில் ஒன்று என எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

## ஜனாதிபதி பிரேமா விரும்பினால் நாடாளுமன்றைக் கலைக்கலாம்!

கொழும்பு செப். 15

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை வலுவற்றது என சட்டமா அதிபர் ஆலோசனை கூறியிருப்பதால்—

இனிமேல் ஜனாதிபதி பிரேமதாஸா தான் விரும்பிய நேரத்தில் — தற்போதைய நாடாளுமன்றத்தை— கலைப்பதைசட்டவிதி எதனாலும் தடுக்க முடியாது என்று சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பான இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் வரை, நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று அரசமைப்பின் 70 [1] (இ) பிரிவு தெரிவிக்கிறது.

திரு. பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டதும், மேற்படி சட்டப்பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்பதை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேச மன்னிப்புச்சபை ஸ்ரீலங்கா அரசுக்கு 'புத்திமதி'

லண்டன், செப். 15

''எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒழுங்கு முறையை ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவத்திற்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.''—இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனில் வெளியிட்ட தனது அறிக்கை ஒன்றில் 'புத்திமதி' கூறியிருக்கிறது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனித உரிமைகளை மதித்து நடக்க இராணுவத்திற்கு ஸ்ரீலங்கா அரசு கற்றுக் கொடுக்க வேண்டும்.

மனித உரிமை மீறலை அரசு சகித்துக் கொள்ளாது என்றும்—

மனித உரிமை மீறலில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும்—அவர்கள் இராணுவம், பொலீஸ், ஊர்காவல்படை உட்பட எந்தப் படையில் இருந்தாலும் — அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும் என்றும் ஸ்ரீலங்கா அரசு அறிவிக்க வேண்டும்.

—இப்படி மன்னிப்புச் சபை கேட்டுள்ளது. (க-எ)

## சபாநாயகர் திடீர் சுகயீனம்

கொழும்பு, செப். 15

சபாநாயகர் எம். எச். முஹம்மது சுகயீனம் காரணமாக கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. (த-10)

## முச்சந்தி முரளி



எந்தப் புத்திமதியும் எவருக்கும் செவிடன் காதில் ஊதின சங்கு தானே ......!

# புதிய நிர்வாக மையமாக மாங்குளம் பகுதி தெரிவு

யாழ்ப்பாணம், செப். 15

வடபிரதேசத்தின் நிர்வாக மையமாக மாங்குளம் பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் இது குறித்து கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

### கருத்தரங்கில் பூர்வாங்க இணக்கம்

இந்தப் பூர்வாங்க முடிவு குறித்து பல்வேறு மட்டத்தினரின் கருத்துக்களையும் ஒருங்கிணைக்கும் விதமாக மேலும் பல கலந்துரையாடல்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'வடபிரதேசத்தில் நிர்வாக மையத்துக்கான இடவமைவுத் தெரிவு' என்னும் தலைப்பிலான முழுநாள் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பேராசிரியர் வி. நவரத்தினராசா, பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரின் தலைமையில் நடந்த கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், யாழ். செயலக அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்.

புதிய நிர்வாக மையத்தை தெரிவு செய்வது தொடர்பாக பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினர். புதிய இடவமைவுக்கு ஏதுவான பல்வேறு காரணிகள் பற்றியும் அங்கு ஆராயப்பட்டது. ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

புதிய நிர்வாக மையத்துக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உரிமைக்கான உறுதிப்பாடு



ஈழத்தமிழரின் உரிமைக்காக 13 நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி திலீபன் தனது உண்ணா விரதத்தை ஆரம்பித்த 4 ஆம் ஆண்டு பூர்த்தி தினம் இன்றாகும்.

இன்று முதல் அடுத்துவரும் 12 தினங்களையும் தியாகி திலீபன் காட்டிய உறுதி வழியில் "உரிமைக்கான உறுதிப்பாட்டை" வெளிப்படுத்தும் தினங்களாக ஈழத் தமிழர் அனுஷ்டிப்பார்கள்.

## திருமலை துறைமுகத்தில் வெடி குண்டுகளுடன் முஸ்லிம் பெண் கைது!

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் வைத்து படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட முஸ்லிம் பெண் ஒருவரிடமிருந்து வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

இத்தகவலை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

## புளியங்குளத்தில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 15

வவுனியா மாவட்டம், புளியங்குளம் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இவ்வாயுதங்களை விடுதலைப் புலிகள் கண்டுபிடித்து கைப்பற்றியுள்ளனர்.

ரி 56 ரக ரவைக் கூடுகள் —5, தோட்டா ரவைகள் — 860, ஜே. ஆர். ரக கைக் குண்டுகள் — 3, தலைக்கவசம் 01 ஆகியனவே அவையாகும். (ஒ)

### தீர்வுக்கான திட்டத்தை புலிகள் தந்தால்

# தமிழருக்கு உரிமை வழங்க மகாசங்கம் வற்புறுத்துமாம்!

கொழும்பு செப். 15

நாட்டைப் பிரிப்பதற்கு வகை செய்யும் திட்டத்தைத் தவிர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் எம்மிடம் தந்தால், அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து சாதகமாகப் பரிசீலனை செய்யுமாறு அவரை வற்புறுத்தவும் நாம் தயார்!

இவ்வாறு மல்வத்தை மகாநாயக்கர் வண. றம்புக்வெல்ல ஸ்ரீ விப்பாசி தேரர் தம்மைச் சந்தித்த தமிழ்ப் பிரமுகர் ஒருவரிடம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட தமிழ்ப் பிரமுகர் மல்வத்தை மகாநாயக்க தேரரை கடந்த மாதம் 23 ஆம் திகதி கண்டி தலதா மாளிகையில் சந்தித்திருந்தார். அப்போது தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்தினாவும் பிரசன்னமாக இருந்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும், அதற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரவும் உதவுமாறு அந்தப் பிரமுகர் மகாநாயக்க தேரரிடம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு ஆதரவான அமைப்பின் தலைவர் கைது!

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படும் ஓர் அமைப்பின் தலைவர் என்று கூறப்படும் திரு. பி. வி. பக்தவத்சலம் நேற்று முன்தினம் சென்னையில் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் அவர் கூட்டியிருந்த பத்திரிகையாளர் மாநாடு தமிழக அரசால் தடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (த)

## ஜெயலலிதாவுக்கு தொடர்ந்து "கறுப்புப் பூனைகள்" பாதுகாப்பு!

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் தேசிய பாதுகாப்புப் படையினரின் (கறுப்புப் பூனைகளின்) பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ், செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பிய கடிதத்தை ஜெயலலிதா நேற்று சட்டசபையில் வெளியிட்டார்.

மாநில பொலீஸ் சிறப்புப் பாதுகாப்புக் குழுவை உருவாக்கும் வரையில் ''கறுப்புப் பூனைகள்'' பாதுகாப்பு நீடிக்கும் என்றும்—

தமிழக பொலீஸ் படையின் திறனை வளர்ப்பதற்காக அந்தப் படைக்கு விசேட பயிற்சி வழங்க உள்துறை அமைச்சகம் பணிக்கப்பட்டிருக்கிறது என்றும்-பிரதமரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-எ)

### சுய விருப்பத்தின் பேரில்

## நாடு திரும்பும் அகதிகளை ஏற்பதற்கு அரசு ஏற்பாடு

கொழும்பு, செப். 15

சுய விருப்பத்தின் பேரில் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்திய அதிகாரிகள், தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள 6 ஆயிரம் தமிழ் அகதிகளின் பெயர்ப் பட்டியலை இலங்கை அரசிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அகதிகள் வசித்து வந்த இடம், அவர்கள் பார்த்த தொழில், குடும்ப விபரங்கள் ஆகியன இந்திய அதிகாரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சமஷ்டி முறையை ஏற்படுத்த காலம் கடந்துவிடவில்லை

### "ஏஷியா வீக்" தலையங்கம்

யாழ்ப்பாணம், செப். 15

இரண்டு சட்டசபைகளையும் ஒரு நாடாளுமன்றத்தையும் கொண்ட சமஷ்டி முறையை ஸ்ரீலங்காவில் ஏற்படுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

கடந்த வாரம் வெளியான ''ஏஷியா வீக்'' சஞ்சிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர், சமஷ்டி முறையை ஸ்ரீலங்காவில் ஏற்படுத்தி முயன்றிருந்தால் பிரச்சினைக்கு அது தீர்வாக அமைந்திருக்கலாம்.

ஆனால் இப்போது இனங்களுக்கிடையிலான பகைமை வீழ்ந்து ஆழமாக நடப்பட்டு விட்டது. இவ்வேளையில் இத்தகைய ஏற்பாடு தீர்வாக அமையுமா என்ற கேள்வி எழலாம்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் சமஷ்டி முறைக்கு மேலான நிர்வாக கட்டமைப்பு முறையை ஸ்ரீலங்காவில் அறிமுகப்படுத்தலாம்.

கூட்டமைப்பு முறை — சிங்கள, தமிழ்ப் பகுதி வில் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

அவுஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் பிரஜாவுரிமை பெற்ற M. Sc. [கம்பியூட்டர் விஞ்ஞானம்] பட்டதாரியான செவ்வாய் குற்றமுள்ள [பரவம் - 77/13] இந்து மணமகனுக்கு A/L க்குக் குறையாத தராதரமும், 5' 2'' க்குக் குறையாத உயரமும் கொண்ட 24 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு:- இல. 352, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18085]

அவுஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் பிரஜாவுரிமை பெற்ற B. Sc. [பொறியியலாளர்] பட்டதாரியான குறைந்த பாவமுள்ள இந்து மணமகனுக்கு A/L க்குக் குறையாத தராதரமும் 5' 2'' க்குக் குறையாத உயரமும் கொண்ட 25 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு:- இல 353, உதயன், யாழ்ப்பாணம். [18086]

யாழ். 30 வயதுள்ள G. C. E. படித்த ஆறு வருடங்களாக ஜேர்மனியில் பணிபுரியும் திக்கு வாயுற்ற, சொத்துக்கள் நிரம்பிய, அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் கவனிக்கப்படமாட்டாது. தொடர்பு: இல. 351. மே/பா உதயன் யாழ்ப்பாணம். [18069]

## துர்க்கா திருமண சேவை

சகல தொழில் களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம் புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [4294]

## அம்பாள் திருமண சேவை

பொறியியலாளர், கணக்காளர், டாக்டர்கள், பி. எஸ் ஸி, பி. ஏ. ஆகிய மணமக்களுக்கு பட்டதாரி மணப்பெண்கள் தேவை. விண்ணப்ப முற்பணம். ரூபா 50/-. சின்னச்சாமிக்குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17915)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்கள் எதுவாயினும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம். விவாகப் பொருத்தம் எதுவாயினும் தொடர்பு: டாக்டர் தசிவானந்தன் பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [18097]

## செவ்வாய் மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றன. சனிக்கு அஷ்டமத்துக் குருவாலும், வக்கிரச் சனியும், செவ்வாயும் ஒன்றை ஒன்று [20 - 11 - 91] வரை வெட்ட பார்வைகளாலும், யுத்தம் உக்கிரமடையும், தெற்கிலும் கிளர்ச்சிகளையும் உண்டாக்கும். தங்கம்ஸ் முத்திரைச் சந்தையடி, [நூலாசிரியர்] Prof. சத்தியதாஸன், சித்தங்கேணி. [18162]

## வகுப்புகள்

Typing. Short - Hand வகுப்புகள் வார, இறுதி நாட்களில் இரு பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும். Bond Institutes, 8A, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம். [4287]

## பாடப் புத்தகம்

O/L, A/L மாணவர்கள் இலகுவில் ஆங்கிலம் கற்க, கற்பிக்க கைநூலாக ''ஈசி இங்கிலிஷ்'' (Easy English) வெளிவந்துள்ளது 1 ஆம், 5 ஆம் பகுதிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு. [4296]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி (கந்தர்)

15 09 91 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

மன்னகுளம்,
மருதனாமடம். [18166]

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991 - 10 - 11 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நுண்ணுயிரியலில் உதவி விரிவுரையாளர் / விரிவுரையாளர் [சிரேஷ்ட] / விரிவுரையாளர் தரம் 1 சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
2. நுண்ணுயிரியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர்.
3. உயிரிரசாயனவியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்

**சம்பள அளவுத் திட்டம்**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1:
ரூபா:
9, 660 - 8x250 - 11 690/- மாதமொன்றுக்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
ரூபா:
8, 000 - 5x250 - 9,250/- மாதமொன்றுக்கு

விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா,
4, 500 - 10x100 - 5,500/- மாதமொன்றுக்கு!

(மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு படிகள் அதிகமாக உள்ள சம்பளத்தில் அதாவது 4, 900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்).

தற்காலிக விரிவுரையாளர்
ரூபா: 4, 900/-
மாதமொன்றுக்கு

உதவி விரிவுரையாளர்
ரூபா: 5,900/-
மாதமொன்றுக்கு [நிலையானது] ஓராண்டுக்கு

(ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4, 500 - 10 x 200 - 6, 500/- சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 3. 900/-
மாதமொன்றுக்கு [நிலையானது]

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

\- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1991-09-12 (சி/0...)

# உயர் கலை வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

First In Com.
G. A. Q.

ஆரம்பம்:
15 - 09 - 1991
மு. ப. 8-00
[சி-0510]

# Chundikuli Girl's College, O. G. A. - RE-Union

## 23 - 09 - 1991

பி. ப. 3 00 - பரியோவான் தேவாலயத்தில் செல்வி E. I. Kelk இன் ஞாபகார்த்த ஆராதனை

பி. ப. 4 00 - வருடாந்த கூட்டம் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில்

பி. ப. 4 30 - தேநீர் - பல்சுவை நிகழ்ச்சிகள்

பழைய மாணவர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

செயலாளர்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

(சி/0498)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
07 - 03 - 1923

மறைவு:
26 - 08 - 1990

திதி:
15 - 09 - 1991

## திரு. புண்ணியமூர்த்தி தெண்டாயுதபாணி

ஆண்டொன்று சென்றாலும் தங்கள் நினைவலைகள் எம் இதயங்களை விட்டகலா.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [18151]

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
01 - 05 - 1962

உதிர்வு:
26 - 08 - 1990

திதி:
15 - 9 - 1991

## திருமதி பவானி தயாபரன்

[வேலணை மேற்கு வேலணை, வட்டாரம் 8]

பாலகியைக் கையேந்திப் பாதுகாப்பான அரண் ஏல இருந் தேவெளியில் ஏதுங்கால் - காலன் என வானிருந்தே குண்டொன்று வந்துனது தோள் மீது தான் புகுந்து தாக்கியது அந்தோ,
அந்தோ' பவானி வாழ்வு ஆரும் பருவத்தே தந்த பெரும் துயரம் தாங்குவமோ' - உந்தன் ஆருயிர்ச் சேய் பாலுக்காய் ''அம்மா'' வெனும் அழுகை தீராதே எம் வயிற்றுத் தீ''

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவன் திருவடிகளை எந் நேரமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவன், மகள்,
அப்பா. அம்மா,
மாமன், அத்தை,
தம்பி, தங்கை,
மைத்துனர்மார். மைத்துனிமார்,
சுற்றத்தார்.

ஆசிரியர்,
... [18066]

# தமிழ் மா மன்றம்

இருபாலை.

15 09 - 91இல் நடைபெற இருந்த ''சாத்திய பரிசுச்சீட்டு'' இழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 14 - 10 - 91 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர்.

(18099)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

## சோலைவரி அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை, பிரதேசத்தில் (மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம்) சோலைவரி அறவீடு சார்பாக, 1991 ஆம் ஆண்டுக்கு வரியிறுப்பாளர்களுக்கு பிரதேச சபையின் நான்கு உப அலுவலகங்களால் வழங்கப்பட்ட] சோலைவரி அறவீடு சார்பான அறிவுறுத்தலின் பிரகாரம் தவணை வருடாமும் முறையே 1 ஆம் கந்தாயம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பும், 2 ஆம் கந்தாயம் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பும், 3 ஆம் கந்தாயம் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும், நான்காம் கந்தாயம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும் சோலைவரி பிரதேசசபை உப அலுவலகங்களில் செலுத்த வேண்டும்.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் சோலைவரி செலுத்தத் தவறும் பட்சத்தில் வலி தென் மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் இருக்கும் குடிமனைகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் செலுத்தப்பட வேண்டிய சோலைவரி கந்தாயப் பணத்தில் 15% தண்ட அறவீடும். குடிமனைகள், வெற்றுக் காணிகள் அல்லாத ஆதனங்களின் சோலைவரி கந்தாயப் பணத்தில் 20% தண்ட அறவீடும் அறவிடப்படும் என்பதை வரியிறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

மேலும் சோலைவரி அறவீடுகள் சார்பான மேலதிக தகவல்களை மேற்குறிப்பிடப்பட்ட உப அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

க. கனகரட்ணம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
நகரமண்டபம்,
மானிப்பாய். (சி/0500)

# ஓராண்டு நினைவஞ்சலி

## திரு. வ. நடராசா

[வலி கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலக பொறுப்பதிகாரி]

தோற்றம்:
18 - 06 - 1933

மறைவு:
20 - 08 - 1990

வாசனை மண்மிக்க வசாவிளானில்
வாழ்ந்த நடராசன் வானத்தின் குண்டால்
வாழ்வு வீழ்ந்தது வானமும் அதிர்ந்தது
வாழ்வினில் யார் துணை என ஏங்கி நிற்குதே
அவர் குடும்பம்.

மாதச் சம்பளத்தை மகிழ்வோடு ஊழியர்க்கு
மேசையிலே பகிர்ந்தளித்தீர் மேன்மையுடன்
நமெடுத்தோம்
கணக்கைச் சரிபார்த்தீர் கையெழுத்து வைக்கவில்லை
ஆ யன் கணக்கு வைத்தான் கடுமிரைச்சல் கேட்ட
தையா

மாயப் பறவை ஒன்று மாச் செட்டி பொம்மர் அது
கிழிறங்கிக் குத்தியதோ குண்டு மழை சொரிந்ததுவோ
வான் முனையில் மலரானோம் வல்லூறுப் பிடியிலே
தேச புகழ் நடராஜன் செத்த கதை நம்பவில்லை.

ஊழியர்க்கு ஊழியனாய் ஆசானாய் அதிகாரி
தேசமொடு வாழ்ந்திருந்த நினைவு நெஞ்சை அறுக்
குதையா
வாச முல்லை - படர்ந்த மரம் வேரறுந்து வீழ்ந்த
பின்பே
ஆறவழி ஏதுமில்லை நடராஜன் போன பின்பே

நீர் இருந்த மேசையொடு கதிரை பேனாவும்
காணுகின்ற போதினிலே உங்கள் காட்சி தெரியு
தையா
ஆசையுடன் அழைக்கின்றோம் ஐயா நீர் வருக என
வேலை நேரம் ஆச்சுதல்லோ விரைந்தோடி வந்திடு.

ஆத்ம சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோ. சிவசுந்தரமூர்த்தி,
(சக ஊழியன்)

[18163]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதைகுழியிலிருந்து வெடிக்கும் புரட்சி!

மூன்றரைத் தசாப்தங்களுக்கு முன்னர், தமிழகத்தில் பெரும் அரசியல், சமூக விழிப்புணர்ச்சி முகிழ்த்தது. தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளுக்கும் அந்த விழிப்புணர்ச்சி வேகமாக விரவியது.

அதன் விளைவாக இனம், மொழி, கலைகள், பண்பாடுகள், வரலாறுகளைப் பேணவும், வளர்க்கவும், மேம்படுத்தவும் வேண்டும் என்ற உந்துதல் மக்களிடையே உருவானது. இதற்கான விதையை சமூக மட்டத்தில் நட்டவர் ஈ.வே. ராமசாமிப் பெரியார் எனலாம். அவரைத்தொடர்ந்து அறிஞர் அண்ணா தமிழகத்தில் புதிய அரசியல் அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்தார்.

பெரியார் சமூக சீர்திருத்தமாகத் தொடங்கிய பணியை அறிஞர் அண்ணா புதிய அரசியல் சகாப்தத்திற்கான அத்திவாரமாக மாற்றினார். பெரியாரின் நினைவு தினம் நேற்று 14 ஆம் திகதியும், அறிஞர் அண்ணாவின் நினைவு தினம் இன்று 15 ஆம் திகதியும் அமைகின்றன.

இந்நாளில் அவர்கள் இருவரும் தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும், சமூக மட்டத்திலும், அரசியல் துறையிலும் ஆற்றிய தொண்டுகள் நினைவு கூரத்தக்கவை. மிகச் சிறப்பாக, தமிழகத்தில் மீண்டும் அரசியல் விழிப்புணர்ச்சி முகிழ்த்து வரும் இவ்வேளையில், அவர்களின் இலட்சியங்கள் ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டியவை.

தமிழக மக்கள் என்று தனியாக அல்லாது திராவிடர் பரம்பரையைச் சேர்ந்த சகல திராவிட மக்களும் தமது தனித்துவத்தையும், பண்டைய மகிமையையும் பேணுவதற்குத் திராவிடப் பேரரசு ஒன்று தேவை என்பதை அவர்கள் இருவரும் உணர்த்தினார்கள்.

அதனால் தென் இந்தியாவில் திராவிட நாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்னெடுத்து அதற்காகப் போராடினார்கள். வட நாட்டு ஆரியர்கள் தென்னகத்துத் திராவிடர்களின் அரசியல் மற்றும் சமூக சுதந்திரங்களையும், பொருளாதார சுபீட்சத்தையும் பறித்தெடுத்து விட்டதை எடுத்துச் சொன்னார்கள்.

பெரியாரும், அண்ணாவும் திராவிடப் பேரினவாதிகளாகவும், தமிழ்ப் பேரினவாதிகளாகவும் விளங்கினார்கள் என்பதில் சந்தேகமில்லை. சமஷ்டி என்ற போர்வையில் திராவிடர்களின், தமிழர்களின் இறைமையும், அரசியல் சுதந்திரமும் குறையாடப்பட்டதை மக்களுக்கு எடுத்தோதினார்கள்.

அவற்றின் பெறுபேறாக தமிழக மக்களிடையே இன-மொழி — பண்பாட்டு உணர்வுகள் வளர்ந்தன. தனிநாடு வேண்டும் என்ற போராட்டத்திற்கு ஆதரவளித்தார்கள். திராவிடர்களின், தமிழர்களின் இந்த எழுச்சியை, விழிப்புணர்ச்சியை மிகத் தந்திரமாக அன்றைய பிரதமர் நேரு முதலில் மழுங்கடித்தார். பின்னர் சீன - இந்திய போரைக் காட்டி, தேச ஒற்றுமை வேண்டும் எனக் கூறி விசேடமாகச் சட்டம் கொண்டு வந்து முற்றாக வெட்டிப் புதைத்து விட்டார்!

எனினும் அந்தப் புதைகுழியிலிருந்து தக்கவேளை வரும்போது மீண்டும் புரட்சி — போராட்டம் — வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கான பின்புலத்தை, சூழ்நிலையை இன்றைய ஜெயலலிதா அரசு உருவாக்கிக் கொடுக்க ஆரம்பித்துள்ளது!

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 15

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கவுள்ள 'தமிழீழ சித்திர சிற்பக் கல்லூரி' சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகக் கேட்போர் கூட்டத்தில் நடைபெறும். [த]

### அதிபர்களுக்கு அழைப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களையும், நாளை முற்பகல் 9 மணிக்கு, தத்தமது கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு வருகை தருமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. [ஒ]

### வேக நடை போட்டி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடத்தும் தியாகி திலீபன் நினைவு நடகள விழாவில் மாவட்ட மட்டத்திலான வேக நடைப் போட்டி 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

ஆண்களுக்கான போட்டி காலை 6-00 மணிக்கும், பெண்களுக்கான போட்டி காலை 7-00 மணிக்கும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பமாகும். [த]

### அரையிறுதி ஆட்டங்கள்

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டம் யாழ் ஷப்றா அணிக்கும், தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணிக்கும் இடையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலும்—

மற்றைய அரையிறுதி ஆட்டம் யாழ். சென்ரலைட்ஸ் அணிக்கும், யாழ். ஜொனியன்ஸ் அணிக்கும் இடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும் இன்று நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

### 'தமிழீழ நோக்கு' வெளியீட்டு விழா

'தமிழீழ நோக்கு' என்னும் ஆய்வு சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா வாழ்த்துரை வழங்குவார்.

### பவள விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 15

சுன்னாகம் யாழ். மயிலணி சைவ மகா வித்தியாலய பவள விழாவினை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நுண்கலைக் கண்காட்சியும், கலை விழாவும் நாளை மறுதினம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறும். [த]

# சமாதானம் ஏற்படும் வேளை வேண்டத் தகாத பிரேரணை!

### சிங்கப்பூர் பத்திரிகை கருத்து

சிங்கப்பூர், செப். 15

ஸ்ரீலங்காவில் சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு முயற்சிகள் மேற்கொள்வதற்குரிய காலம் கனிந்து வரும் வேளையில், அந்நாட்டு ஜனாதிபதி மீது குற்ற விசாரணை நடத்தக் கோரும் பிரேரணை கொண்டு வரப்பட்டிருப்பது ஆசியான் நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது—

இவ்வாறு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருப்பதாக சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் "ஸ்ரெயிட் ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தி பிரசுரமாவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னர் அதே பத்திரிகை "சமாதானத்துக்கான புதிய நம்பிக்கைகள்" என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது.

ஆனையிறவு யுத்தத்தில் இரு தரப்பிலும் இழப்புகள் நேர்ந்திருப்பினும் புலிகளின் போரிடும் ஆற்றல் குறைந்துவிடவில்லை. இந்த யுத்தத்தில் அவர்கள் 24 நாட்கள் இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டது அவர்களது உறுதியை எடுத்துக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகளும் அரசும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். இந்திய அமைதிப் படையை வெளியேற்றுவதில் இருதரப்பாரும் ஒன்றிணைந்து செயலாற்றிய நிலை மீண்டும் ஏற்பட வேண்டும்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் சிறிது அதிஷ்டமும் இருந்தால், சமாதானம் மீண்டும் ஏற்படுவது சாத்தியமே — என்று அந்தத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [அ-10]

## பிறக்கப் போகும் சிசுவின் தோற்றம் எப்படி இருக்கும்?

### கம்பியூட்டர் மூலம் அறியலாம்

ரோக்கியோ, செப். 14

தாயின் வயிற்றில் இருக்கும் சிசு ஆணா அல்லது பெண்ணா என்பதை அச்சிசு பிறப்பதற்கு முன்பே கண்டுபிடிக்கும் முறை தற்போது நடைமுறையில் இருந்து வருவது தெரிந்ததே.

ஆனால் தற்போது தாயின் வயிற்றில் இருக்கும் சிசு பிறந்த பின்னர் எப்படி தோற்றமளிக்கும் என்பதை பிறப்பதற்கு முன்னரே படம் பிடித்து தரும் நவீன கம்பியூட்டர் ஒன்றை ஜப்பானிய மட்சுஷிற்றா எலெக்ட்ரிக் இன்டஸ்டரியல் கம்பெனி கண்டு பிடித்து இருக்கிறது.

வயிற்றில் இருக்கும் சிசுவின் தாய், தந்தை ஆகியோரின் படங்களுடன் சிசு ஆணா, பெண்ணா என்ற விவரங்களையும் அந்தக் கம்பியூட்டருக்குக் கொடுத்தால், பிறந்த பின்னர் குழந்தை பெறும் தோற்றத்தைக் கொண்ட படத்தை அக்கம்பியூட்டர் தரும்.

இதே போல் நமது தோற்றம் பல ஆண்டுகளின் பின்னர் எப்படியிருக்கும் என்பதை முன்கூட்டியே காட்டும் படங்களையும் இந்தக் கம்பியூட்டர் தரும்.

ஒருவர் தனது தற்போதைய படத்தை இந்த கம்பியூட்டருக்குக் கொடுத்தால் சில ஆண்டுகளின் பின்னர் அவர் பெறவுள்ள தோற்றத்தைக் கொண்ட படத்தை இக்கம்பியூட்டர் தரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதிக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாகிவிடும்.

ஆகவே நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத்து பிரகடனம் செய்யப்பட்ட பின்னர், இத்தகைய பிரிவுகளின் கீழ் ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை ஏற்று, நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சபாநாயகர் சேர்க்க முடியாது.

ஆகவே—

இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மேற்படி பிரேரணையைக் கொண்டு வரமுடியாது.

— இவ்வாறு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி பிறப்பிப்பதற்கு முன்பாக, சபாநாயகர் இப்பிரேரணையை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்காததன் காரணமாகவே பிரேரணை வலுவற்றதாகுகிறது என்றும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருக்கிறார். [உ-எ]

### ஜனாதிபதிபிரே..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு எழுத்துமூலம் சபாநாயகர் எம். எச். முகம்மது தெரிவித்திருந்தார்.

இப்போது—

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை வலுவற்றது என்றும், அதனால் அரசமைப்பின் 70 (1) (இ) பிரிவு ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தாது என்றும் சட்டமா அதிபர் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார்;

ஆகவே சட்டமா அதிபரின் ஆலோசனையை ஏற்று—

நாடாளுமன்றத்தை தான் விரும்பிய நேரத்தில் ஜனாதிபதி கலைக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. [உ-எ]

## ஈராக் பிரதமர் ஹம்மாதி பதவி நீக்கப்பட்டார்!

ஈராக் பிரதம மந்திரி திரு. ஹம்மாதி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆளும் புரட்சி ஆணைத் தலைமைச் சபையிலிருந்து அவர் விலக்கப்பட்டு திரு. மொகமட் ஹம்சத் சுபைதி அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார் என்று ஈராக் வானொலி அறிவித்தது.

வளைகுடாப் போருக்கும் பின்பே திரு. ஹம்மாதி பிரதமரானார். "பாத் கட்சி" தேர்தல்களை அங்கீகரித்து அதிபர் சதாம்ஹூசைன் ஒப்புதல் அளித்ததை அடுத்து திரு. ஹம்மாதியை விலக்கும்முடிவு மேற்கொள்ளப்பட்டது. (த)

## யூகோ. சமஷ்டி ஜனாதிபதி படையினருக்கு எச்சரிக்கை

பெல்கிறேட், செப். 14

குரோஷியா மாநிலத்தில் இருந்து சமஷ்டி இராணுவத் துருப்புகள் வெளியேறாத பட்சத்தில் சர்வதேசத் தலையீட்டை கோரப்போவதாக யூகோஸ்லேவிய சமஷ்டி ஜனாதிபதி எச்சரித்திருக்கிறார்.

சேர்பியர் இனத்தவரின் ஆதிக்கத்தில் உள்ள சமஷ்டி இராணுவம், சுதந்திர நாடாகத் தன்னை கடந்த ஜூன் 20 ஆம் திகதி பிரகடனம் செய்துகொண்ட குரோஷியா மாநிலக் குடியரசினுள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

பாசறைக்குத் திரும்பும்படி தான் விடுத்த உத்தரவை சமஷ்டி இராணுவம் புறக்கணிப்பது தமது அரசுக்கு எதிரான இராணுவச் சதியாகக் கருதப்படும் என்றும் சமஷ்டி ஜனாதிபதி கூறியிருக்கிறார். [இ-எ]

### புதிய நிர்வாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கான இடவமைவுத் தெரிவில் கிளிநொச்சி, பளை, தீவகம், யாழ். நகரம், வவுனியா, முல்லைத்தீவு எனப் பல்வேறு இடங்களினதும் புவியியல், வரலாற்று, அரசியல், பொருளாதாரப் பின்னணிகள் பற்றி பல்துறை சார்ந்தவர்களும் விளக்கமளித்தனர். அவற்றுக்குச் சாதகமாகவும், பாதகமாகவும் கருத்துரைகள் வழங்கினர்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, திரு. இ. மயூரநாதன், கலாநிதி சி. க. சிற்றம்பலம், திரு. செ. பாலச்சந்திரன், திரு. கா. குகபாலன், பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன், பேராசிரியர் வி. நவரத்தினராசா, திரு நந்தகுமார், திரு. என். தில்லைநாதன், திரு. எஸ். உருத்திரலிங்கம், திரு. ந. செந்தில்குமார் ஆகியோர் கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றினர்.

கலந்துரையாடல் நேற்று மாலை வரை நடைபெற்றது. கலந்துரையாடலின் இறுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த வே. பாலகுமாரன் தொகுப்புரை வழங்கினார். (அ-5)

### ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மாகாணசபை ஊழியர்

கொழும்பு, செப். 15

சகல மாகாண சபைகளிலும் கடமையாற்றும் அரசார்பு ஊழியர்களை பொது சேவை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவர பொது நிர்வாக அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்த யோசனையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

மாகாண சேவைகளின் கீழ் கடமையாற்றும் பல்வேறு சார் அதிகாரிகளின் மத்தியில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார். [த]

### குரங்கு கடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 15

மானிப்பாய் நியாகசிலம் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மத்தியில் திடீரென பாய்ந்த குரங்கு ஒன்று, சிறுவனைக் கடித்துக் குதறியது.

காயமடைந்த மானிப்பாயைச் சேர்ந்த ஆனந்தராசா வசந்தன் (13 வயது) என்ற அந்த சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15)

### கொமன் வெல்த் மாநாடு 22 இல் ஆரம்பம்

கொமன் வெல்த் நாடாளுமன்ற அமைப்பின் வருடாந்த மாநாடு இம்மாதம் 22 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆரம்பமாக இருக்கிறது. அதில் கலந்து கொள்ள இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

### தமிழருக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கை விடுத்தாராம்.

அப்போது, விடுதலைப் புலிகளின் சரியான நிலைப்பாடு குறித்துத் தாங்கள் தெளிவில்லாமல் இருப்பதாகவும் —

அவர்கள் எதனைக் கேட்கிறார்கள் என்பது குறித்துத் தெரியப்படுத்தினால் மகா சங்கத்தினர் அதனை ஆராய்ந்து, ஏதாவது செய்ய இயலும் என்றும் மகாநாயக்க தேரர் கூறியதாக அறிய வருகிறது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதியை மகா சங்கத்தினரால் கேட்க முடியும் என்றும் அவர் கூறியதாகத் தெரிய வந்துள்ளது.

சர்வமத தலைமைப்பீடங்கள் இணைந்து இது விடயத்தை ஜனாதிபதியிடம் வற்புறுத்தி, சமாதானத்துக்கு உதவமுடியும் என்று சம்பந்தப்பட்ட பிரமுகர் மகாநாயக்கரிடம் கூறியதை அவர் ஏற்றுக் கொண்டார் எனவும் அறிய வந்தது.

இச்சந்திப்பு நிகழ்ந்த நான்கு ஐந்து தினங்களில், ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரப்பட்டதால் மேற்கொண்டு எதுவும் நடக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பிரமுகர் கொழும்பில் வசிப்பவர் என்பதும், அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து செல்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

### நாடு திரும்பும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களிடமிருந்து இலங்கை அரசினால் கோரப்பட்டுள்ளன.

அகதிகளை தலைமன்னார் இறங்குதுறையில் வைத்து ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு அமைச்சு செய்து வருகிறது. குடியகல்வு - குடிவரவுப் பிரிவு சுகாதாரப்பகுதி மற்றும் சுகாதாரப் பிரிவு ஆகியன தலைமன்னாரில் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த அகதிகள் தமது முன்னைய இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும் வரை அவர்களுக்கு தற்காலிக புகலிடம் வழங்கப்படும்.

இதேவேளை சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்பும் அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்கத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு அகதிகளுக்கான ஐ. நா. புனர்வாழ்வு அலுவலகம் இலங்கை அரசைக் கோரியுள்ளது. புனர்வாழ்வு அதிகார சபை இந்த வேலைத் திட்டத்தை ஒருங்கிணைக்கும் என்று அமைச்சர் பி. தயாரத்தின தெரிவித்துள்ளார். [த-எ]

### தியாகத்தேன்: 1

வாடிக் கிடக்கும்
விடுதலைப் பயிருக்கு
தேடினாய் புரட்சியெனும்
அரியநீரை... அதனால்
ஓடினாய் நல்லூருக்கு...
தியாகப் பயணம்
தொடங்க... !

[illegible]

(தியாகி திலீபனின் நினைவாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chundikuli Girl's College
Thillayampalam Institute,

## மனையியல் கண்காட்சி

இடம்: தில்லையம்பலம் நிறுவன மண்டபம்
(பழைய பூங்கா வீதி)

காலம்: 23 ஆம் திகதி தொடக்கம்,
25 ஆம் திகதி வரை

நேரம்: காலை 9 மணி – மாலை 6 மணி

அனைவரையும் அழைக்கிறோம்.

– அதிபர்

(சி/0499)

## அறிவித்தல்

புத்தூரில் அமைந்துள்ள எமது சூர்யா மருந்தகத்திலிருந்து வெள்ளி இரவு [13-9-91] கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நாம் எமது மருந்து மற்றும் பொருள்களில் மறைமுக விலை [Code Price] பொறித்துள்ளோம். எனவே சந்தேக நபர்கள் எவரும் சந்தேகமான முறையில் மருந்து மற்றும் பொருள்களை விற்பதற்கு உங்களிடம் வந்தால் எமக்கு உடன் அறிவிக்குமாறு தயவாக வேண்டுகிறோம்.

நன்றி

சூர்யா மருந்தகம்,
புத்தூர்.

- நிர்வாகத்தினர்
[18167]

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி

## ★ பட்டப் படிப்புகள் ★

**G. A. Q**
(கலை முதற் தேர்வு)

மாலை நேர விரிவுரைகள்
(3 மணிமுதல், 6 மணிவரை)

விரிவுரைகள் ஆரம்பம்:-
25 - 09 - 1991 புதன்கிழமை

பல்கலைக்கழக விண்ணப்ப முடிவுத் திகதி:
30 - 09 - 1991

★ G. C. E. உயர்தர வகுப்பில் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

★ பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் எமது கல்லூரியில் 30 - 09 - 91 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நிர்வாகி

தொடர் கல்வி நிலையம்,
உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.

[சி-0494]

## நோயாளருடன் கப்பல் திங்களன்று புறப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 15

கொழும்பு செல்லும் நோயாளர்களுடனான கப்பல் நாளை திங்கட்கிழமை புறப்படுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த வெள்ளியன்று பதிவு செய்து கப்பலில் கொழும்பு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள், திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இரண்டு நாட்களுக்குப் போதுமான தண்ணீர் மற்றும் உணவுடன் வருமாறு பணிப்பாளரால் கேட்கப்பட்டுள்ளனர். (இ)

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

### விஞ்ஞான மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி

### கல்வியாண்டு 1990 - 91

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட விஞ்ஞான மாணவர்களுக்கும் ஏனைய [சிரேஷ்ட] விஞ்ஞான மாணவர்களுக்கும் 1990 - 91 கல்வி ஆண்டு 02 - 12 - 1991 இல் தொடங்கும் புதிய மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி 01 - 10 - 1991 இல் ஆரம்பமாகும். இம் மாணவர்கள் 01-10-1991 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து கணகசபாபதி மண்டபத்தில் [கணிதப் பிரிவு] நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

1. தேசிய அடையாள அட்டை
2. பதிவீட்டு அட்டை.

புதிதாக அனுமதிக்கப்பட்ட எல்லா (பௌதீக, உயிரியியல்) விஞ்ஞான மாணவர்களுக்கும் ஆரம்ப கணனிப் பயிற்சி நெறி 04 - 11 - 1991 இல் ஆரம்பமாகும்.

– பதிவாளர்.

[இ-0555]

## ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

யாழ்ப்பாணம் செப். 15

காரைநகர் இராணுவமுகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி விடாது ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை அன்றைய தினம் கடற்பிராந்தியத்தில் இருந்து தீவுப்பகுதிகளை நோக்கியும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். (த-15)

இந்து நாகரீகம்
G.C.E. A/L
திரு. ஜோதீஸ்வரன்

### கலை வர்த்தகக் கல்லூரி C.C.A.

யாழ்ப்பாணம்.

8-9 பிரிவு I — 92
9-10 பிரிவு II — 92
11-12 பிரிவு I — 91
1-2 பிரிவு II — 91

நடைபெறுகிறது.

(இ-0512)

## சமஷ்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றங்களைக் கொண்டிருக்கும். ஆனால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று இருக்காது. — என்று அந்த ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-த)

## விசேட பாதுகாப்பு

கொழும்பு, செப். 15

எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து கணேஸ்

நாவாந்துறை கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகமுத்து கணேஸ் (14-09-91) நேற்றுக் காலமானார்.

அன்னார் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், மாணிக்கத்தின் அன்புக் கணவரும், ஜீவராணி, ஜீவராஜா, ரஞ்சி, புஸ்பா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராஜாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (15-09-91) இன்று பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
நாவாந்துறை.

தகவல்:
நா. ஜீவராஜா
(சேகர், மகன்)

(4297)

### முகாந்திரம் கந்தையா துரையப்பா

யாழ். மாவட்ட முன்னாள் பதிவாளர் (Retd. District Registrar Jaffna) கந்தையா துரையப்பா 14 - 09 - 91 காலமானார். அன்னார் காலம் சென்ற திருமதி இராசம்பாள், திருமதி செல்வலெட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும், திரு. சிவபாலன் [இளைப்பாறிய காசாளர் இலங்கைவங்கி யாழ்ப்பாணம்], திருமதிகள் கா. ஆனந்தமனோகரி, பா. இராஜேஸ்வரி, வி. சிவனேஸ்வரி, பொ. யோகேஸ்வரி, சி. கமலாதேவி, இ. சாரதாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருவாளர்கள் நா. காசிப்பிள்ளை [இளைப்பாறிய பிரதம லிகிதர் இ. மி. ச. சுன்னாகம்], வ. பாலசிங்கம் [இளைப்பாறிய பிரதம லிகிதர் யாழ். தொழிற் திணைக்களம்], Dr. கு. விவேகானந்தன் [Glentilt Estate Maskeliya], வே. பொன்னம்பலம் [பிரதம லிகிதர் கல்வி அமைச்சு கொழும்பு], காலஞ்சென்ற பா. சிவசணநாதன் [லிகிதர் Hydramani Colombo], ந. இரங்கநாதன் [குறிஞ்சி மருந்தகம் திருநெல்வேலி] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15 - 09 - 91 காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

29/21 உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

தகவல்:
து. சிவபாலன்
[மகன்]

(18178)


இன்றைய சேமிப்பு—நாளைய சந்ததியின் பாதுகாப்பு

இன்றே

ஷப்றாவுடன்

இணைந்து சேமியுங்கள்!

நிதித்துறையில் உங்கள் நண்பன்

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

2, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு - 4
தொலைபேசி: 508087-90


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org